1970 ஏப்ரல் 6]

முள்ளிப் பள்ளத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டடம்.

*692 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டடத்திற்கு 6—12—1968-ல அடிக்கல் நாட்டப்பட்டும் அதற்கான பூர்வாங்க வேலைகள் துவங்க கால தாமதமேற்படுவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியத்திற்கு போதிய நிதி வசதியில்லாமையால் முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டிடத்திற்கான வேலைகள் துவங்க தாமதமேற்பட்டன.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, இதுபோன்ற ஊராட்சி ஒன்றியங்களிலே கட்டிட வேலைகளுக்கு அடிக்கல் நாட்டப்படுவதற்கும், கட்டடம் முடிக்கப்படுவதற்குமிடையே பல ஆண்டுகள் கடந்து போகின்றன ? இந்தக் குறையைப் போக்க குறிப்பிட்ட காலத்துக்குள்ளாகவே, அடிக் கல் நாட்டப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளாகவே இந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முள்ளிப் பள்ளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக் கட்டிடத்திற்கான வேலைகள் துவங்கக் காலதாமதமேற்படுவதற்குக் காரணம், அங்கிருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தில் நிதிப் பற்றுக்குறை இருந்ததன் காரணமாக காலதாமத மானதாகக் கூறப்பட்டிருக்கிறது. நிதி வசதியைப் பெருக்க முயற்சி யெடுக்கப்பட்டு, ஒரளவிற்கு வரிகளை அதிகப்படுத்தியிருப்பதால் நிதி வசதி ஏற்பட்டிருக்கிறது என்றும், விரைவிலே அந்தத் திட்டம் முடிக்கப்படும் என்றும் குறிப்பு அங்கிருந்து கிடைத்திருக்கிறது.

மருத்துவச் சிகிச்சை பெற ஆசிரியர்களுக்கு அடையாள அட்டைகள்.

*693 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிக்கூட ஆசிரியர்கள் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற சர்டிபிகேட் வாங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க அடையாள அட்டைகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற அளிக்கவேண்டிய என். ஜி. ஒ. சான்றிதழுக்குப் பதிலாக, அடையாள அட்டைகள் அரசிதழ் பதிவு பெறாத அரசாங்க ஊழியர் களுக்கு வழங்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இது அரசினர் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு மட்டுமே பயன்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எப்பொழுது முதல் அமுலுக்கு வரும் ? இப்பொழுது அதுமாதிரிக் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு ஆரம்பத்திலாவது கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப் பொழுது அந்த அட்டைகள் அச்சிடப்பட்டு ஆங்காங்கு விநியோகிக்கப்பட விருக்கின்றன. பலருக்கு இப்பொழுது வழங்கும் முயற்சியை விரைவில்